2003 மார்ச் 27]
107—

மருத்துவமனை

***6567—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, கல்லக்குடியில் அரசு மருத்துவமனை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) லால்குடி தொகுதி, கல்லக்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

முற்பகல் 10-20

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, கல்லக்குடி பேரூராட்சிப் பகுதியில் வசிக்கும் மக்கள் மருத்துவமனை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசு மருத்துவமனைக்கு வரவேண்டும் என்றால், 20 கிலோ மீட்டர் தூரமுள்ள லால்குடிக்கு வர வேண்டியுள்ளது. ஆகையால், 5 கிலோ மீட்டர் தூரமுள்ள புள்ளம்பாடியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதியுடன் தரம் உயர்த்தவும், கல்லக்குடிக்கு ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துக் கொடுக்கவும் தாயுள்ளம் கொண்ட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அனுமதி வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்ட புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அதிலே, புள்ளம்பாடி ஆரம்ப சுகாதார நிலையம்தான் அந்த ஒன்றியத் தலைமை ஆரம்ப சுகாதார

நிலையமாக இருக்கிறது. ஏற்கெனவே, 30 படுக்கைகள் கொண்ட, தாம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்படுவதற்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையம் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, கல்லக்குடி என்கிற அந்தப் பேரூராட்சிக்குத் துணை சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தத் துணை சுகாதார நிலையம் அங்கு கட்டடம் இல்லாமல் செயல்பட்டு வந்தால், அதற்குக் கட்டடம் இந்த ஆண்டேகூட கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எம். பாலன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 108, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

108—

நல வாரியம்

***31270—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆட்டோ ஓட்டுநர்களுக்குத் தனி நல வாரியம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஏற்கெனவே தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுநர் நல வாரியம் அமைக்கப்பட்டு, 20-7-2000 முதல் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.